## *2020ம் ஆண்டு கருபொருள்: குணமளிக்க மகிழ்ச்சியுடன் அனுப்பப்படுதல்*

*அ.தி.ச. ஏப்பிரல் மாத சிந்தனை மடல்: நான் பலிகளை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் (மத் 9:13)*
*கவனம்: கடவுளே நம்மை தூதுரைப்பணிக்கு அனுப்புகிறார்*
*நிகழ்வு: இரக்கத்தின் ஆண்டவர்*

---

***அறிமுகம்:***

நான் உண்மையிலேயே விரும்பாத ஒருவரை நம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கிறோம்? அவர்களை நமது போட்டியாளர், எதிர்ப்பாளர் மற்றும் பகைவர்களாக கருதியிருக்கின்றோம். நமக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பின் அவர்களை "ஒருவிதமாக கவனித்திருப்போம்". புண்படுத்தியிருப்போம் அல்லது அழித்திருப்போம். எதிரி மீதான வெறுப்பையும் கோபத்தையும் உண்மையிலேயே களையக்கூடிய சூழ்நிலையில் நம்மில் எத்தனை பேர் இருந்திருக்கிறோம்…. பின்னர் இரக்கத்தை காண்பித்து கௌரமான முறையில்…. மேல்மட்ட நிலைக்குச் சென்று அவர்களுக்கு உதவியிருக்கிறோம்? இம்மாதத்தின் நம்முடைய கருபொருள் மத்தேயு நற்செய்தியை அடிப்படையாக கொண்டுள்ளது. "நான் பலிகளை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்".

***ஆரம்ப பாடல்:***

**என் தேடல் நீ என் தெய்வமே**
நீயின்றி என் வாழ்வு நிதம் மாறுதே
உன்னை மனம் தேடுதே நீ வழிகாட்டுமே (2)
இறைவா இறைவா வருவாய் இங்கே
இதயம் அருகில் அமர்வாய் இன்றே (2)

1. ஒரு கோடி விண்மீன்கள் தினம் தோன்றினும்
நீயின்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்
பிறர் அன்பை என் பணியில் நான் ஏற்கையில்
உன் அன்பு உயிர் தந்து வாழ்வாகிடும்
இறைவார்த்தையில் நிறைவாகுவேன்
மறைவாழ்விலே நிலையாகுவேன்
வழிதேடும் எனைக் காக்க நீ வேண்டுமே - இறைவா

2. உன்னோடு நான் காணும் உறவானது
உள்ளத்தை உருமாற்றி உனதாக்கிடும்
பலியான உனை நானும் தினம் ஏற்கையில்
எளியேனில் உன் வாழ்வு ஒளியாகிடும்
உன் மீட்டலால் எனில் மாற்றங்கள்
உன் தேடலால் எனில் ஆற்றல்கள்
வழி தேடும் எனைக் காக்க நீ வேண்டுமே - இறைவா

அ.தி.ச. உறுப்பினர் ஒருவர் **ஆரம்ப செபம்** கூறுவார்.

**உரையாடல்**

இன்றைய கதை, ஐரோப்பிய ஆகாயத்தில் இரண்டாம் உலகப்போரின்போது நடைப்பெற்ற ஒரு உண்மை சம்பவத்தை குறிப்பிடுகின்றது.

இங்கிலாந்திலுள்ள *கிம்போல்ட்டன்* என்னும் இடத்தில் 379வது குண்டு வீசும் குழுவினரோடு, B17 “பறக்கும் கோட்டை” விமானியாக சார்லி பிரௌன் பணியாற்றி வந்தார். அவரது B17விமானத்தை “உங்களின் பழைய குடிகூடகம்” என அழைப்பார்கள். அது போராளிகளால் தாக்கப்பட்டு படுமோசமான நிலையில் இருந்தது. சொந்த ஊரான *கிம்போல்ட்டன்* நோக்கி பயணிக்க வேண்டியவர்கள், திசைக்காட்டி கருவி சேதமுற்றதால், திசைமாறி எதிராளியின் பிரதேசத்திற்குள் வெகு தூரம் உள்ளே பறந்து சென்றனர். எதிரிகளின் ஆகாய வெளியில் பறந்து கொண்டிருந்த B17 விமானத்தை சுட்டு வீழ்தும்படி ஒரு ஜெர்மனி விமானியான ஃபிரான்ஸ் ஸ்டெதகலருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த விமானி, B17ஐ நெருங்கியபொழுது விமானத்தின் நிலமை குறித்து அவரது கண்களால் நம்பவே முடியவில்லை. “இத்தகைய மோசமான நிலையில் இருக்கும் ஒரு விமானத்தைத் தான் பார்த்ததே இல்லை” என தன் சொந்த வார்த்தைகளில் விவரிக்கின்றார். விமானத்தின் வால் மற்றும் பின்புறப்பகுதி கடுமையான சேதத்திற்கு உள்ளாயிருந்தது, வால் பகுதியில் இருந்த சுடுபவரோ காயமுற்றிருந்தார். மேலும் மேலிருந்து சுடுபவர் விமானத்தின் உடற்பகுதியில் மேலே கிடந்தார். விமானத்தின் மூக்கு நொறுக்கப்பட்டிருந்து, எல்லா இடங்களிலும் ஓட்டைகள் காணப்பட்டன. வெடிமருந்துகளை வைத்திருந்த ஃபிரான்ஸ் B17 விமானத்தை நெருங்கி பறந்தார் அப்போது ஆங்கில விமானியான சார்லி பிரௌனியை கூர்ந்து கவனித்தார். அவர் பய உணர்வுடன் இரத்தம் படிந்த சேதமுற்ற விமானத்தை தம் கட்டுப்பாட்டில் வைக்க போராடிக் கொண்டிருப்பதை கண்ணுற்றார்.

அவர்கள் எங்கு போகிறார்கள் என்று தெரியாத நிலையில், ஃபிரான்ஸ் 180 பாகைக்கு திரும்பும்படி சார்ளியிடம் கை அசைத்தார். தாக்குதலுக்கு உள்ளான அந்த விமானத்தை வட கடல் மற்றும் இங்கிலாந்து நோக்கி செல்ல ஃபிரான்ஸ் உடன் சென்று வழிநடத்தினார். பின்னர் சார்லி பிரௌனுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, தமது விமானத்தை திருப்பி ஐரோப்பா நோக்கி ஃபிரான்ஸ் பறந்தார்.

ஃபிரான்ஸ் தரையிறங்கியவுடன் கட்டளை பிறப்பித்த அதிகாரியிடம் B17 ரக விமானத்தை கடலில் சுட்டு வீழ்த்தியதாக தெரிவித்தார். வேறு யாரிடமும் அவர் உண்மையை கூறவில்லை. அதே வேளையில், இங்கிலாந்து நாட்டில், சார்லி பிரௌனும் உயிரோடிருந்த எஞ்சிய சகாக்களுடன் என்ன நடந்தது என்பதுபற்றி எல்லோரிடம் விளக்கி கூறினார்கள். பின்னர் இதுபற்றி யாரிடமும் பேசக்கூடாது என்ற உத்தரவையும் பெற்றனர்.

பின்னர் 40 ஆண்டுகள் கழித்து தம்முடைய சகாக்களை காபாற்றிய ஜெர்மனி லூப்வேப் விமானியை கண்டுபிடிக்க விரும்பினார். பல வருட ஆராச்சிக்குப் பிறகு ஃபிரான்ஸ்சை இறுதியில் கண்டுபிடித்தார். போருக்கு பிந்திய ஒன்றுகூடலின்போது கூட இச்சம்பவம் குறித்து ஃபிரான்ஸ் எதுவும் பேசவில்லை… 379வது வெடிகுண்டு குழுவினரின் ஒன்றுகூடலின்போது இரு விமானிகளும் அப்பொழுது உயிருடன் இருந்த 25 பேர்களுடன் அமேரிக்காவில் சந்தித்தனர். இவர்களெல்லாம் உயிரோடிருப்பதற்கு காரணம் ஃபிரான்ஸ் காட்டிய கருணை மற்றும் இரக்கமே. இதன் நிமித்தமாக அன்றய தினம் ஃபிரான்ஸ் அவர்களை சுடலில்லை.

அவர்களை ஏன் சுட்டு வீழ்தவில்லை என்று வினவியபோது, ஸ்டிக்லர் பின்னர் இவ்வாறு கூறினார். “தைரியமான இவ்வீரர்களை கொல்லுவதற்கு எனக்கு மனம் வரவில்லை. நீண்ட நேரம் அவர்களை நெருங்கி பறந்தேன். வீடுநோக்கிச் செல்ல மூர்க்கத்தனமாக முயற்சித்தனர். அவர்களின் முயற்சிக்கு வழிவிட்டேன். அவர்களை சுட என்னால் முடியவில்லை. நான் அவ்வாறு செய்திருப்பின் அது “வான்குடையில் இறங்கும் ஒரு மனிதனை சுடுவதற்கு ஒத்ததாக அமைந்திருக்கும்.

***சிந்தனை:***

*மேற்கூறப்பட்ட வாசகம் உங்களுக்கும் இன்றைய திருச்சபைக்கும் என்ன அர்த்தத்தை வழங்குகின்றது? தயவுடன் ஒருவொருக்கொருவர் பகிரவும்.*

**ஆய்ந்தறிதல்**





*மத்தேயு 12:1-8*

அக்காலத்தில் இயேசு ஓய்வுநாளில் விளைச்சல்வழியே சென்றார். அவருடைய சீடர்களுக்குப் பசியெடுக்க, அவர்கள் கதிர்களைக் கொய்து தின்னத்தொடங்கினர். இதைக் கண்ட பரிசேயர் அவரை நோக்கி, "இதோ! உம் சீடர் ஓய்வுநாளில் செய்யத் தகாததைச் செய்கிறார்களே" என்றனர். அவரோ அவர்களிடம், "தாவீதும் அவருடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபொழுது அவர் என்ன செய்தார் என்று நீங்கள் வாசித்ததில்லையோ? அவர் கடவுளின் ஆலயத்தில் நுழைந்து காணிக்கை அப்பங்களை உண்டார். அவரோடு இருந்தவர்களும் உண்டனர். அவற்றை அவரோ அவரோடு இருந்தவர்களோ உண்ணலாகாதன்றோ? குருக்கள்மட்டுமே உண்ணலாம். ஓய்வுநாளில் குருக்கள் கோயிலில் ஓய்வை மீறினாலும் அது குற்றமாகாது என்று திருச்சட்டத்தில் நீங்கள் வாசித்ததில்லையோ? ஆனால் கோயிலைவிடப் பெரியது இங்கே இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். 'பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருப்பின், குற்றமற்றோரைக் கண்டனம் செய்திருக்கமாட்டீர்கள். ஏனெனில், மனுமகன் ஓய்வுநாளுக்கு ஆண்டவர்" என்றார்.

***சிந்தனை:***

- *வாசகத்தை உரத்த குரலில் வாசித்து. திறந்த மனதுடன் செவிமடுக்கவும்.*
- *ஒரு வார்த்தை அல்லது சொற்றொடர் உங்கள் மனதை தொடும்வரை அல்லது ஏவப்படும் வரை அமைதியுடன் தனியாக படிக்கவும்.*
- *வார்த்தை அல்லத சொற்றொடர் வாயிலாக பரிசுத்த ஆவியானவர் என்ன கூறுகிறார்?*
- *ஆண்டவரின் வார்த்தைக்கு பதில் மொழியாக அவரிடம் நீங்கள் என்ன கூறினீர்கள்?*
- *இரக்கத்தின் ஆண்டவர் வாயிலாக பிறரை நீங்கள் எவ்வாறு தொட்டீர்கள் என்பதை 3-4 நபர்கள் கொண்ட குழுவினரிடம் உங்கள் அனுபவத்தை மற்றும் ஏன் அது உங்களுக்குப் மிகுந்த அர்த்தம் உள்ளதாக இருந்தது என்பதையும் பகிரவும்.*

**செயல்**

*குணமளிக்க மகிழ்ச்சியுடன் அனுப்பப்படுதல் என்பது 2020ஆம் ஆண்டிற்கான கருபொருள். இறைவனின் இரக்கத்தின் வாயிலாக காயப்பட்டவர்களுக்கு குறிப்பாக நமது குடும்ப உறுப்பினர்கள், அ.தி.ச. மற்றும் நம்மை சுற்றி வாழும் மக்களுக்கு மகிழ்ச்சியையும் குணமளிப்பையும் கொண்டு செல்ல முடியும். அத்துடன் இவ்வாண்டில் இறைவார்த்தையை இவ்வாறு பிறருடன் பகிரமுடியும் என்பதையும் கலந்து பேசவும்.*

### *முடிவு செபம்*

*அ.தி.ச. குழுவின் மற்றொரு உறுப்பினர்* ***முடிவு செபத்தை*** *கூறுவார்.*

### *முடிவு பாடல்:*

**இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்**
திரும்பிப் பார்க்கமாட்டேன் - 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால் - 2
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை அடைந்தேனே

1. அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை ஆதலின் குறையில்லை
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் - 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே விடுதலை அடைந்தேனே

2. தாயும் அவரே தந்தையும் அவரே தரணியில் நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மைச் செவ்வழி நடத்தும் தெய்வம் அவரன்றோ
ஆயனே முன்னால் அலகையே பின்னால் - 2
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே